**“கிராமத்தின் சேமிப்புக்கள் - மக்களின் வாழ்வின் எழுச்சிக்கு”**

# புத்தாண்டு வைபவமும் சேமிப்பு வேலைத்திட்டமும் - 2014

## வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவினால் வெளியிடப்படுகின்ற வங்கிச்சங்க நெறிப்படுத்தல் ஆலோசனைச் சுற்றறிக்கைக் கடித இலக்கம் 17 மற்றும் 18 எட்டாவது பிற்சேர்க்கை.

1. தலைவர்,கட்டுப்பாட்டுச் சபை
   சமுர்த்தி வங்கிச் சங்கம், . . . . . . . . . . . . . . . . .

2. முகாமையாளர்,
   சமுர்த்தி வங்கிச் சங்கம் . . . . . . . . . . . . . . . . .

3. தலைவர்
   நிறைவேற்றுக் குழு,சமுர்த்தி மகாசங்கம்,. . . . . . . . . . . . . . . . .

4. முகாமைத்துவப் பணிப்பாளர்
   சமுர்த்தி மகாசங்கம்,. . . . . . . . . . . . . . . . .

5. தலைமையக முகாமையாளர்
   பிரதேசசெயலகம் . . . . . . . . . . . . . . . . .

6. பிரதேச செயலாளர் /சமுர்த்திபிரதிப் பணிப்பாளர்
   பிரதேசசெயலகம் . . . . . . . . . . . . . . . . .

7. சமுர்த்தி உதவி ஆணையாளர்/மாவட்ட சமுர்த்தி பிரதிப்பணிப்பாளர்
   மாவட்டச் செயலகம். . . . . . . . . . . . . . . . .

8. சமுர்த்தி ஒருங்கினைப்பு உத்தியோகத்தர்
   மாவட்டச் செயலகம். . . . . . . . . . . . . . . . .

9. மாவட்டச் செயலாளர் /மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்
   மாவட்டச் செயலகம் . . . . . . . . . . . . . . . . .

10. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
    இலங்கை சமுர்த்தி அதிகாரசபை.

11. பொதுமுகாமையாளர் மற்றும் சகலபணிப்பாளர்கள்
    இலங்கைசமுர்த்திஅதிகாரசபை

12. செயலாளர்
    பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
    5ம் மாடி, இல. 464. T.B ஜாயா மாவத்தை
    கொழும்பு-10

வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவு இலங்கை சமுர்த்தி அதிகார சபை
4ம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல

2014.03.11

தொலைபேசி இலக்கம் 0112-873798 தொலைநகல் இலக்கம்- 0112-869494

## வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் வங்கிநிதி நடவடிக்கைப்பிரிவினால் வெளியிடப்படுகின்ற வங்கிச்சங்க நெறிப்படுத்தல் ஆலோசனைச் சுற்றறிக்கைக் கடித இலக்கம்

## 17 மற்றும் 18 எட்டாவது பிற்சேர்க்கை.

## "கிராமத்தின் சேமிப்புக்கள் - மக்களின் வாழ்வின் எழுச்சிக்கு" புத்தாண்டு வைபவமும் சேமிப்பு வேலைத்திட்டமும் - 2014

**1.அறிமுகம்:-**

1.1 1995ம் ஆண்டின் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஆரம்ப குறிக்கோளை குறைந்த வருமானம் பெறும் மக்களை சேமிப்பின் பொருட்டு ஊக்கப்படுத்துவதும், சுயதொழில்வாய்ப்புக்கான மூலதன வசதிகளை சமுர்த்தி வங்கிகள் ஊடாக வழங்குவதுமாகும். அதற்கமைய 18வருட காலங்கள் பூராகவும் சேமிப்பு மேம்பாட்டின் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட முன்னனி வேலைத்திட்டங்களாக புத்தாண்டு சேமிப்பு வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்த முடியும். இன்று அது சகல மக்களினதும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி வேலைத்திட்டமாக மாறியுள்ளது.

1.2 அதற்கமைய ஒரே தினத்தில் "கிராமத்தின் சேமிப்புக்கள்-மக்களின் - மக்களின் வாழ்வின் எழுச்சிக்கு" என்ற தலைப்பின் கீழ் "ஆயிரம் புத்தாண்டு வைபவங்களை" நடாத்துவதன் ஊடாக அதனை தேசிய ரீதியாக நாடுமுழுவதும் மக்களின் பங்களிப்புடன் நடைபெறும் பாரிய தமிழ் சிங்கள புத்தாண்டுக் களியாட்டமாக மாறியுள்ளது.

1.3 அதற்கமைய 2006ம் ஆண்டில் ரூபா மில்லியன் 140 இருந்து 2013ம் ஆண்டிற்குள் ரூபா மில்லியன் 1000 இற்கும் மேலாக இந்த மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் மிக வெற்றிகரமான ஒரு முன்னேற்றத்தினைக் காட்டியுள்ளதனை நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு சமர்ப்பிக்கின்றேன். வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித்திணைக்களம் தாபிக்கப்பட்டு சகல அடிப்படைச் சமுதாய வங்கிச் சங்கமும் இலாபகரமானதாக சந்தர்ப்பத்தில் இந்த சேமிப்பு வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக செயற் படுத்திக் கொள்வது சகலரதும் பொறுப்பாகும்.

| ஆண்டு | அங்கீகரித்த வைப்புத்தொகை | ஏனையவைப்புத்தொகை ரூபா. மில்லி | மொத்த வைப்புத்தொகை ரூபா. மில்லி |
|---|---|---|---|
| 2006 | 53.5 | 86.5 | 140.0 |
| 2007 | 79.2 | 120.8 | 200.0 |
| 2008 | 127.0 | 145.0 | 272.0 |
| 2009 | 169.9 | 142.3 | 312.2 |
| 2010 | 308.1 | 202.6 | 510.7 |
| 2011 | 402.9 | 201.5 | 604.4 |
| 2012 | 624.9 | 265.7 | 890.6 |
| 2013 | 808.1 | 254.4 | 1062.5 |

1.4 அதன் பிரகாரம் மேலுள்ள அட்டவணையினை பகுப்பாய்வு செய்யும் போது அங்கீகரித்த வைப்புக்களின் எண்ணிக்கை உட்பட ஏனைய வைப்புத் தொகைகளிலும் விருத்தியொன்றினைக் காட்டுகின்றது. அத்துடன் வங்கிச் சங்கங்களுக்கு மிகவும் இலாபகரமான நீண்ட கால வைப்புக்களின் பொருட்டு சிறந்த ஊக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ள வங்கிச் சங்கங்களுக்கு முடியுமாகவுள்ளது. இதற்கான பிரதான காரணமாக இருப்பது மொத்தப்பணியாளர்களினதும் மக்களினதும் பாரியளவிலான பலமும் அவர்களின் சிறந்த அர்ப்பணிப்புமாகும். இதன் காரணமாக எமது பணிப்பாளர்கள் உட்பட கலந்து கொண்ட சகலருக்கும் மதிப்பு மிக்க பாராட்டினை இதனுடாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

1.5 அதற்கமைய 2013ம் ஆண்டில் 1074 வங்கிகளிடத்தேயே ரூபா 1500000/-இற்கான அங்கீகரித்த வைப்பு எல்லையினைத்தாண்டிய வங்கிச் சங்கங்களின் எண்ணிக்கையானது 11ஆகும் என்பதுடன் 2012ம் ஆண்டில் வங்கிச் சங்கங்களின் எண்ணிக்கையானது 64ஆகும். அத்துடன் இவ்வங்கிச் சங்கங்களிடையே 5000000/-இற்கான எல்லையினைத்தாண்டிய வங்கிச் சங்கங்களையும் காணக்கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இதற்கமைய அவ்வங்கிச்சங்கங்கள் தொடர்பில் நீங்கள் அறிந்து கொள்வதற்காக சமர்ப்பிக்கின்றேன்.

| பிரதேச செயலகம் | வங்கிச்சங்கம் | அங்கிகரித்த வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|
| கிரான் | சந்திவெளி | 6,190,600/= |
| வாழைச்சேனை | வாழைச்சேனை | 5,796,490/= |
| சியாம்பலாண்டுவை | அதிமலை | 5,590,181/= |
| ஹிக்கடுவை | பூசா | 4,672,750/= |
| ஹிக்கடுவை | ஊரவத்த | 3,755,655/= |

அதற்கமைய தலைமையலுவலகத்தின் வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவினால் வெளியிடப்பட்ட வங்கிச் சங்க நெறிப்படுத்தல் ஆலோசனைச் சுற்றறிக்கை இலக்கம் 17 மற்றும் 18 அத்துடன் அவற்றின் பிற்சேர்க்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்குறிப்பிடப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டதாக இவ்வாண்டிலும் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**2. தலைப்பு**.

‘‘கிராமத்தின் சேமிப்புக்கள் மக்களின் வாழ்வின் எழுச்சிக்கு’’ என்பதாகும்

3.**புத்தாண்டு கொடுக்கல் வாங்களின் பொருட்டு வாழ்வின் எழுச்சி அடிப்படைச் சமுதாய வங்கிச்சங்கத்தினை திறந்து வைத்தல்.**

3.1 இம்முறை புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும் நாளானது ஏப்ரல் மாதம் 14ம் திகதி திங்கள் மு.ப.11.05ஆகும் என்பதனால் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களின் பொருட்டு வங்கிச் சங்கம் ஏப்ரல் மாதம் 14ம் திகதி 11.00 மணிக்கு முன்னர் திறக்கப்படல் வேண்டும்.

3.2 புத்தாண்டு கொடுக்கல் வாங்களின் பொருட்டு வங்கிச் சங்கத்திற்கு வருகை தரும் வாடிக்கையாளர்களுக்கு பொருத்தமான அன்பளிப்பு ஒன்றினை வங்கிச சங்கத்தின் செலவில் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. அந்த அன்பளிப்புக்களை வழங்கும் போது விசேடமாக வங்கிச் சங்கத்திற்கு பாதகமில்லாதவாறு அங்கீகரித்த வைப்புத்தொகைக்கு பொருத்தமானதாக அன்பளிப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

3.3 அன்பளிப்புக்களை வழங்கும் போது கீழே காட்டப்படும் வறையறைக்குள் நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும். செலவிடவேண்டியேற்படின் அதன் பொருட்டு வேலைத்திட்டத்திற்கு முன்னர் விசேட அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**குறிப்பு:-**

இக்கால வரையறைக்குள் வைப்பிலிடப்படுகின்ற அங்கீகரித்த வைப்புத்தொகையானது வரையறை ஆகக் குறைந்தது ஒரு வருட காலத்திற்காவது கணக்குகளில் பராமரிக்கப்பட்டு வரல் வேண்டும்.

அன்பளிப்புக்களை வழங்கும் பொருட்டு கீழ்குறிப்பிடப்படும் எல்லைகளுக்குள் ரூபா100/= யிலிருந்துரூபா1000/= வரையில் அங்கீகரித்த வைப்புக்களின் பொருட்டு ரூபா10/= இற்கான நாணயக்குற்றி ஒன்றினை வழங்குமாறு அறியத்தருகின்றேன். ஒருவருடத்திலும் குறையாத அங்கீகரித்த வைப்புத் தொகையிலிருந்து 5/- த்தாண்டாத தொகையினை இப்பரிசில்களைப் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்த முடியும்.

3.4 புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல்களின் பொருட்டு வங்கிச் சங்கம் திறந்து வைக்கப்படுகின்ற 2014-04-14ம் திகதியும் சேமிப்பு வாரத்தின் 07 நாட்களிலும் பங்கு பற்றும் வங்கிப்பணியாளர்கள் மற்றும் களத்துறை உத்தியோகத்தர்களுக்கு 02 நாட்களுக்கான விடுமுறை தினசம்பளத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த விசேட சம்பளத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு களத்துறை உத்தியோகத்தர்களால் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல் கால வரையறைக்குள் அங்கீகரித்த வைப்பாக ஆகக்குறைந்தது ரூபா 50000/= ஆவது சேகரிக்கப்படல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாக இக் கொடுப்பனவினை செலுத்த அனுமதி யளிக்கப்படுகின்றது. (வங்கிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய நாட்களுக்கு மேலதிகமாக இந்த 02 நாட்களுக்கு மேலதிகமாக இந்த 02 நாட்களுக்கான சம்பளம் உரித்துடையதாகும். )

இது தொடர்பில் குறித்த கணக்குப்பதிவுகளை வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் பொதுப்பேரேட்டில் பதியுமாறு அறியத்தருகின்றேன்.

**4. சேமிப்பு மேம்பாட்டு வாரம் - (2014.4.14ம் - 20ம் திகதிவரை) இது தொடர்பில் வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவின் மூலம் வெளியிடப்பட்ட வங்கிச் சங்க நெறிப்படுத்தல் ஆலோசனைகள் சுற்றறிக்கைக் கடித இலக்கம் 17 மற்றும் 18இற்கான ஐந்தாவது பிற்சேர்க்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும்.**

5. **வாழ்வின் எழுச்சி புத்தாண்டு வைபவம்.**

5.1 தேசிய ரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்த வேலைத்திட்டத்தினை செயற்படுத்த வேண்டியது 2014 ஏப்ரல் 20ம்திகதி ஞாயிற்றுக்கிழமையாகும் என்பதுடன் பொருத்தமான பிரகாரம் தமது வலயத்திற்குள் ஒரு வைபவத்தினை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். இருப்பினும் விசேடமான காரணத்தின் அடிப்படையில் அன்றைய தினத்தன்று நடாத்த முடியாவிடின் பிரதேச செயலாளரின் சிபார்சின் பிரகாரம் ஏப்ரல் 20ம் திகதி யின் பின்னரான தினம் ஒன்றில் நடாத்த முடியும். அது தொடர்பில் வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். முறையான அங்கீகாரமின்றி நடாத்தப்படுகின்ற எந்த வங்கிச் சங்கத்திற்கும் வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவால்ஈடு செய்வதனை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகின்ற ரூபா15000/= தொகை வழங்கப்பட மாட்டாது என்பதனை வினயமுடன் அறியத்தருகின்றேன். அதற்கு மேலதிகமாக வங்கிச சங்கத்தின் செலவில் ரூபா 25000/= இற்கான தொகையினை செலவழிக்க முடியும். வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவினால் இத் தொகை ஈடு செய்யப்படுவது ரூபா 500000/= இலும் கூடிய அங்கீரித்த வைப்பினை சேகரிக்கின்ற வங்கிச் சங்கங்களுக்கு மாத்திரமாகும் என்பதுடன் அந் நிதி எல்லையினைத் தாண்டுவதற்கு தவறும் வங்கிச் சங்கங்கள் அச் செலவுகளை தனது வங்கிச் சங்கத்தின் செலவாக ஏற்றுக் கொள்ளல் வேண்டும். தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததனால் இப்புத்தாண்டு வைபவங்களின் பொருட்டு பிரதேச ஒருங்கிணைப்புக் கழுவின் தலைவர் உட்பட அரசியல் தலைவர்கள், சமயத்தலைவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், மற்றும் சகல மக்கள் தலைவர்களின் பங்கேற்பினைப் பெற்றுக் கொள்ளத் தேவையான அழைப்புக்களை மேற்கொள்ளல் வேண்டும்.

**குறிப்பு:-**

இவை தொடர்பான முன்னேற்றத்தினை இணைப்பு இலக்கம்I மற்றும் II இன் பிரகாரம் மகா சங்கத்திற்கு வழங்கி மகா சங்கத்தினால் சரியாகத்தயாரித்து 2013-05-09ம் திகதிக்கு முன்னர் அனுப்பாத வங்கிச் சங்கத்திற்கு திகதி ஈடு செய்யப்படமாட்டாது.

அதற்கு மேலதிகமாக 5.2 மற்றும் 5.3 வங்கிச் சங்க நெறிப்படுத்தல் ஆலோசனைச் சுற்றறிக்கை கடித இலக்கம் 17 மற்றும் 18 இற்கான ஐந்தாவது பிற்சேர்க்கையின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் வேண்டும்.

6. **பிரச்சாரம்.**

6.1 வாழ்வின் எழுச்சி புத்தாண்டு வைபவத்திற்குரிய பதாதை ஒன்றினை வங்கிச்சங்கத்தின் செலவில் செய்து கொள்வதற்குத் தேவையான அதிகாரத்தினை இத்தால் வழங்கு கின்றது. அதற்கமைய கடந்த வருடங்களில் எங்களால் வழங்கப்பட்ட பதாதைகளின் அறிவில் அழகான பதாதையொன்றாகத் தயாரித்து வங்கி வளாகத்திற்கு முன்னால் நேரகாலத்துடன் காட்சிப்படுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு வங்கிச் சங்கத்திற்குரூபா 1500/= இற்குட்பட்ட உயர்ந்த பட்ச எல்லையின்கீழ் பொருத்தமான தொகையினை செலவுக்கணக்கு – விழா நடவடிக்கைக் கணக்கு (குறீயீட்டு இலக்கம் 2133) பற்று வைத்து பெற்றுக்கொள்ள முடியும்.

6.2 எமது ஊடகப்பிரிவின் ஒத்துழைப்புடன் புத்தாண்டு வேலைத்திட்டங்களுக்குரிய வானொலி, மற்றும் தொலைக்காட்சி போன்ற ஊடகங்களைத் தொடர்பு கொண்டு பரந்த ளவிலான பிரச்சாரம் ஒன்றினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

7. **பணியாளர்களைப் பாராட்டுதல்.**

கடந்த வருடங்களில் கிடைத்த அனுபவங்கள், மற்றம் இவை தொடர்பில் கிடைத்துள்ள யோசனைகள் மற்றும் கருத்துக்களை கவனித்துப்பார்த்ததன் பின்னர் கீழ்குறிப்பிடப் படும் பாராட்டு முறைகளை இவ்வாண்டிலிருந்து செயற்படுத்த எண்ணியுள்ளது.

7.1 **தேசிய மட்டத்திலான பாராட்டுதல்.**
இதன் பொருட்டு பாராட்டும் முறையொன்றினைத் தயாரித்து பாராட்டுக்கள் மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு:-**

இதற்குரிய தகவல்ககளை இணைப்பு IV இற்கமைய சரியாகத்தயாரித்து மகா சங்க முகாமைப் பணிப்பாளரால் 2014-05-09ம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். அவ்வாறில்லாத எவ்வித வங்கிச் சங்கத்திற்கும் பாராட்டுக்கடிதங்கள் வழங்கப்படமாட்டாது எனவும், குறித்த தகவல்களை வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவிற்கு கிடைத்ததா என விசாரித்துப்பார்ப்பது வங்கி முகாமையாளர்களினதும் மாவட்ட விடயப் பொறுப்பு முகாமையாளர்களினதும் பொறுப்பாகும். (உத்தியோகத்தரின் பெயரை ஆரம்ப ஆங்கில எழுத்தில் எழுதி அனுப்புதல் வேண்டும்.)
அங்கீகரித்த வைப்புத்தொகையானரூபா 2500000/= இலும் கூடிய வைப்புத்தொகையினை சேகரிக்கின்ற வங்கிச் சங்கங்கள் பாராட்டுதல்களுக்கு உட்படுத்தப்படும்.

அங்கீகரித்த வைப்புக்களின் பொருட்டு களத்தில் மாத்திரம் ரூபா 250000/= அல்லது அதிலும் கூடிய வைப்புத் தொகையினை சேகரித்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பாராட்டுதலுக்குரிய தகவல்களையும் மகா சங்க மட்டத்தில் அனுப்பும் பொருட்டு இணைப்பு IV படிவத்தினை பயன்படுத்தவும்.

7.2 **மாவட்ட மட்ட பாராட்டுதல்.**

இப்பாராட்டுக் கடிதத்தினை வழங்குவது மாவட்டச் செயலாளர்/மாவட்ட உதவி ஆணையாளரின் கையொப்பத்துடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அங்கீகரித்த வைப்பின் பொருட்டு ரூபா இலட்சம் 15-25ற்கு இடைப்பட்ட வங்கிச் சங்கங்களின் முகாமையாளர்கள், பணியாளர்கள், மற்றும் களப்பணியாளர்களின் பெயரில் இப்பாராட்டுக்கடிதத்தினை வழங்குதல் வேண்டும். அங்கீகரித்த வைப்புக்களின் பொருட்டு ரூபா 50000/= இலும் குறைவான தொகையினை சேகரிக்கும் கள உத்தியோகத்தர்களை இப் பாராட்டுக்களுக்கு உட்படுத்திக் கொள்ளலாகாது.

இதன் பொருட்டு தேவையான தகவல்களை வங்கிச் சங்க மட்டத்தில் பெற்றுக் கொண்டு மாவட்டச் செயலகத்திற்கு பொருந்தமான அட்டவணையொன்றின் மூலம் சமர்ப்பிக்கும் முழுப் பொறுப்பும் முகாமைப்பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்படுவதுடன் குறித்த சான்றிதழ்களைத் தயாரித்து உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் பொறுப்புக்கள் மாவட்டச் செயலகத்தின் வங்கி விடய முகாமையாளருக்கு ஒப்படைக்கப்படுகின்றது.

7.3 **மகா சங்க மட்டத்திலான பாராட்டுக்கள்.**

அங்கீகரித்த வைப்புக்களின் பொருட்டு ரூபா 500000-1500000 இற்குமிடைப்பட்டதனை வங்கிச் சங்கங்க முகாமையாளர்கள், மற்றும் பணியாளர்களுடன் களப்பணியாளர்களின் பெயரில் இப்பாராட்டுக் கடிதம்வழங்கப்படல் வேண்டும். அங்கீகரித்த வைப்புக்களின் பொருட்டு ரூபா 50000/= இலும் குறைந்த தொகையினை சேகரித்த களத்துறை உத்தியோகத்தர்களை இப் பாராட்டுக்களின் பொருட்டு உள்ளடக்கிக் கொள்ளலாகாது.

7.4 புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல் சேமிப்பு வேலைத்திட்டமானது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்திலும்

அடிப்படைச்சமுதாய வங்கிச் சங்கங்களின்உத்தியோகத்தர்களினதும் பங்கேர்க் கப்படுகின்றது.

7.5 வைப்புக்களை சேகரிக்கும்போது பயனாளிகளின் (நிவாரணத்தொகையினை கணக்குகளிலிருந்து நீக்கி புத்தாண்டு வைப்புக்களுக்காக எடுப்பது பாரிய குற்றம் ஒன்றாகும் என்பதனையும் அறியத்தர விரும்புகின்றேன்.

8. **பொது விடயங்கள்.**

8.1 பல்வேறு காரணங்களின் அடிப்படையில் 2013ம் ஆண்டின் புத்தாண்டுச் செலவுகள் ஏதேனும் வங்கிச் சங்கம் ஒன்று ஈடு செய்யாதிருப்பின் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் அது 2014 ஆண்டின் இறுதி இலாப நட்டக்கணக்கில் கட்டாயம் சீராக்கம் செய்யப்படல் வேண்டும்.

8.2 குறித்த பொதுப்பேரேட்டுக்கணக்கினை பதியும் போது கடந்த சுற்றறிக்கைக்கடிதத்திலும் ஏனைய சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற் கொள்ளவும்.

8.3 இவை தொடர்பில் ஏதேனும் தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியேற்படின் 011-2887372 மற்றும் 011-3106382 மூலம் சேமிப்பு மேம்பாட்டுப்பிரிவின் முகாமையாளர் திரு உதயசொய்சா அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

9. **முன்னேற்றத்தினை அறிக்கையிடல்.**

9.1 உதவிசமுர்த்தி ஆணையாளரின்/பிரதி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரின் விசேட கவனத்திற்காக புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல்களின் முன்னேற்றம் தொடர்பில் கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர், அமைச்சின் செயலாளர் ஆகியோரின் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதால் அதன்முன்னேற்றத்தினை துரிதமாக சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. ஆகையினால் தங்களது அலுவலகத்தின் வங்கி விடயப்பொறுப்பு முகாமையாளரின் ஒத்துழைப்புடன் சகல மகா சங்கங்களையும் ஒருங்கிணைப்புச் செய்துகொண்டு கீழ் குறிப்பிடப்படும் படிவத்திற்கமைய மிகச் சரியாக தயாரித்த அறிக்கையொன்றினை 2014-04-30ம் திகதிக்குமுன்னர் எமக்கு அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படுகின்ற தகவல்களுடன் ஒப்பிடும் போது தவறுதல்கள் இருப்பதனால் சரியாகத்தயாரித்து அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வினயமுடன் அறியத்தருகின்றேன்.

| பி.செயலகத்தின்/மகா சங்கத்தின் பெயர் 1 | நடாத்திய புத்தாண்டு வைபவங்களின் எண்ணிக்கை 2 | 2014-04-14ம் திகதி முதல் 2014-04-20ம் திகதி வரையில் அங்கீகரித்த வைப்புக்களின் பொருட்டு சேகரித்த தொகை 3 | 2014-04--14ம் திகதி முதல் 2014-04-20ம் திகதி வரை அங்கீகரிக்கப் படாத வைப்புக்கள் மற்றும் சேகரித்த தொகை 4 | மொத்த வைப்புத் தொகை 3 + 4 5 |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

9.2 **மகா சங்க முகாமைப்பணிப்பாளரின் விசேட கவனத்திற்காக**

முன்னேற்றம் மற்றும் தகவல்களை அறிக்கையிடல் அதன் உண்மைத்தன்மை தொடர்பான முழுப் பொறுப்பும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய மேலே பந்தி 7.1இல் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களை பாராட்டுவது தொடர்பான தகவல்களை சுற்றறிக்கைக் கடித இலக்கம் 17 மற்றும் 18 இற்கான ஆறாவது பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவுக்கும் குறித்த பிரிவுகளுக்கும் கீழ் குறிப்பிடப்படும் தகவல்களுடன் 2014-05-09ம் திகதிக்கு முன்னர் வங்கி நிதி நடவடிக்கைப்பிரிவுக்கு

அனுப்புமாறு அறியத்தருகின்றோம். பிற பிரிவுகளுக்கு அனுப்ப வேண்டிய தகவல்களையும் அத்தினத்திற்கு முன்னர் அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறியத்தரப்படுகின்றது.

**குறிப்பு:**

இத்தினத்தில் தகவல்களை எமக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத எந்த மகா சங்கத்திற்கும் குறித்த செலவுகள் ஈடு செய்யப்படமாட்டாது என்பதுடன் பாராட்டுக்கடிதங்கள் வழங்கப்படமாட்டாது என்பதனையும் மேலும் அறியத்தருகின்றேன். அவ்வங்கிச் சங்கத்திற்கு குறித்த செலவுகளையும் பொறுப்புக்களையும் மகா சங்கத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும் என மேலும் அறியத்தருகின்றேன் இத்தகவல்களை எமக்கு 0112869494 என்ற தொலைநகல் இலக்கத்தின்மூலம் அனுப்புமாறும் அத்தகவல்களை பதிவுத் தபாலில் எமக்கு அனுப்புமாறும் அறியத்தரப்படுகின்றது.

9.2.1 கீழ் குறிப்பிடப்படும் இணைப்பில் அந்தந்த வைப்புக்களின் பொருட்டு வங்கிச் சங்கமும் களத்துறை உத்தியோகத்தர்களும் சேகரித்த மொத்தத் தொகையினை சுட்டிக்காட்டல் வேண்டும்.

புத்தாண்டுக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்ற காலத்திற்குள் கையிருப்பிலுள்ள நிதிக்காப்பீட்டு வரையறை தொடர்பிலும் கூடிய கவனத்தினைச் செலுத்தி காசு கிடைப்பனவினை முகாமை செய்து கொள்ளல் வேண்டும் எனச்சுட்டிக்காட்டுகின்றோம். ஒரு நாளைக்கான காப்பீட்டு வரையறையினை அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு கடந்த முறை கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு ஒரு தினத்திற்காக அதிகரிக்க முடியாது.

| | | |
|---|---|---|
| ஆர்.பி.பீ.திலகசிரி | சீ.டி.களுஆராச்சி | கே.கே.எல்.சந்திரதிலக்க |
| தலைமையதிபதி | பொதுமுகாமையாளர் | பிரதிப் பணிப்பாளர் |
| | | வங்கி நிதிநடவடிக்கை மற்றும் மகா சங்கம். |

இணைப்பு –II

| மாவட்டம்:……………………………   பிரதேச செயலகம் : ……………………………………… | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வங்கிச் சங்கம் | பங்கு 1 | சிறுவர் 2 | சிசுரக்க 3 | கூட்டு 4 | 1+2+3+4 மொத்தம் | அங்கத்தவர் 5 | அங்கத்தவர் அல்லாதோர் 6 | திரிய மாதா | மொத்தம் 5+6+7 | மொத்த கூட்டுத் தொகை 1+2+3+4 +5+6+7 | மொத்த கூட்டுத் தொகைக்கு சமனாக இருத்தல் வேண்டும் | |
| | | | | | | | | | | | களக் கிடைப்பனவு | தலைமைக்காரியாலயத்திற்குகிடைத்ததன் கூட்டுத் தொகை |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |

புத்தாண்டு வைபவம் தொடர்பான தகவல்கள்   இணைப்பு –III

| மாவட்டம் :-………………………   பிரதேச செயலகம் : ……………… மகா சங்கம் :- …………………… | | | | | |
|---|---|---|---|---|---|
| வங்கிச் சங்கம் | புத்தாண்டு வைபவம் நடைபெற்ற திகதி | புத்தாண்டு வைபவம் நடைபெற்ற திகதி இடம் | செலவுக்காக சேகரித்த தொகை | | மொத்தம் |
| | | | அங்கீகரித்த ஈடு செய்கை ரூபா | அங்கீகரித்த வங்கி | |
| | | | | | |
| | | | | | |

இணைப்பு –IV

ரூபா 1500000 அல்லதுஅதிலும் கூடிய அங்கீகரித்த வைப்புக்களை
சேகரித்த வங்கிச் சங்கங்களின் தகவல்கள்

மாவட்டம்:…………………………..

| மகாசங்கம் | வங்கிச் சங்கம் | அங்கீகரித்த வைப்புக்களின் பொருட்டு வங்கிச் சங்கத் திற்கு வருகைதந்து வைப்புச் செய்த தொகை (பங்கு+சிறுவர்+சிசுரக்க+கூட்டு) | அங்கீகரித்த வைப்புக்களின் பொருட்டு களத்திலிருந்து மாத்திரம் சேகரித்த தொகை (இங்கு வங்கிச் சங்கத்தின் உத்தியோகத்தர்களைள் மற்றும் கள உத்தியோகத்தர்களின் பெயர், பதவி மற்றும் சேகரித்த தொகையினைக் குறிப்பிடவும்) | |
|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர் பெயர் | சேகரித்த தொகை. |
| | | | | |
| | | | | |